**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**

**மேட்டூர்,**

**தேதி: 27.10.2025**

**EP. No. 16/2015**

**வழக்கு சாட்சி PW.1–பார்வதி, க/பெ.கோவிந்தன்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து 9, 11 முதல் 14, 16, 18 முதல் 20 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**9, 10 முதல் 14, 16, 18 முதல் 20 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) என் தந்தை பெயர் பழனியப்பன் என்றால் சரிதான். என் தாயார் பெயர் இருசம்மா ஆகும். முத்து, பெரியண்ணன், மாரியண்ணன், தாண்டவன் ஆகியோர்கள் என் உடன் பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். என் சகோதரர்களில் பழனியப்பன் என்பவர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். என்னுடன் பிறந்த சகோதரிகள் கோவிந்தம்மாள் மற்றும் பழனியம்மாள் என்றால் சரிதான். என் தந்தை, தாயார் அனைத்து சீர்வரிசைகளும் செய்து வைத்து தான் திருமணம் செய்து வைத்தார்கள் என்றால் எனக்கு எந்த சீரும் செய்யவில்லை. தாவா சொத்து முழுவதும் என் அண்ணன் தம்பிகள் தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். அந்த தாவா சொத்தை அவர்களுக்குள் வாய்மொழி பாகம் பிரித்து கொண்டு, அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

2) தாவா சொத்தில் எங்களது பங்கை நாங்கள் வேண்டாம் என்று சொல்லி விட்டதால், தாவா சொத்தில் என் அண்ணன், தம்பிகளுக்கு மட்டும் தான் பங்கு உள்ளது என்றால் சரியல்ல. தாவாவை என் பெரியப்பா பிள்ளைகள் தான் தாக்கல் செய்தார்கள் என்றும், என் உடன் பிறந்தவர்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் பெரியப்பா மற்றும் அவரது வாரிசுள் சொல்லி தான் சொத்தில் எனக்கு பங்கு வேண்டும் என்று இந்த மனுவை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் பெரியப்பா வாரிசுகளை எதிர்த்து என் சகோரர்கள் தான் இந்த மனுவை நடத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல.

3) என் பெரியப்பா வகையறாவிற்கு வாய்க்கால் தனியாக உள்ளது என்றும், கிணற்றிலிருந்து நீர் தேவை அவர்களுக்கு எதுவும் இல்லை என்றும், பொய்யான காரணங்கள் சொல்லி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அதற்கு ஆதரவாக நானும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் பெரியப்பா வாரிசுகள் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றுதான் மேற்படி எதிர்மனுதாரர்கள் வழக்காடி வருகிறார்கள் என்றும், அந்த வழக்கை தள்ளுபடி செய்வதில் எனக்கு எதும் ஆட்சேபனை இல்லையா என்றால் இல்லை. நான் மாண்புமிகு சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பாகபிரிவினை வழக்கு குறித்து மேற்கண்ட எதிர்மனுதாரர்களுக்கு தெரியாது என்றால் சரியல்ல.

<u>3 முதல் 8 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1) நானும், என் அக்கா கோவிந்தம்மாள் மற்றும் பழனியம்மாள் ஆகியோர்கள் சேர்ந்து இந்த மனுவை தாக்கல் செய்துள்ளோம். 1ம் எதிர்மனுதாரர் பழனியப்பன் எந்த வருடம் காலமானார் என்று தெரியுமா என்றால் சுமார் 10 வருடங்கள் இருக்கும். பெரியண்ணன், முத்து, தாண்டவன், மாதையன் ஆகியோர்கள் என் சகோதரர்கள் ஆவார்கள். பெரியண்ணன் வகையறா 1ம் எதிர்மனுதாரர் பழனியப்பன் மீது எந்த வருடம் வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றால் சுமார் 20 வருடங்களுக்கு மேல் இருக்கும். 1ம் எதிர்மனுதாரர் பழனியப்பனும், அதேசமயத்தில் தான் பெரியண்ணன் வகையறா மீது வழக்கு தாக்கல் செய்திருந்தார்கள் என்றால் சரிதான். நான் சித்தூரில் வசித்து வருகிறேன். என் அக்கா பழனியம்மாள் மற்றும் கோவிந்தம்மாள் ஆகியோர் மனு சொத்திற்கு அருகாமையில் தான் வசித்து வருகிறார்கள்.

2) என்னை விட இந்த வழக்கு சம்மந்தமாக அவர்களுக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். மனு சொத்தை நீதிமன்ற ஆணையர் 20 வருடங்களுக்கு முன்பு இந்த வழக்கில் வந்து பார்த்தபோது பிரச்சனை நடந்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. என் அக்கா பழனியம்மாள் மற்றும் கோவிந்தம்மாள் ஆகியோர் இது குறித்து தெரிவிக்கவில்லையா என்றால் தெரியவிக்கவில்லை. 20 வருடங்களுக்கு முன்பு தாக்கல் செய்த வழக்குகள் குறித்து என் சகோதரர்கள் என்னிடம் எதுவும் சொல்லவில்லையா என்றால் சொல்லவில்லை. நானும் மனு சொத்து சம்மந்தமாக

வழக்கு நடைபெறுவதால் அது குறித்து நான் ஏதேனும் கேட்டேனா என்றால் எனக்கு சொத்து வேண்டும் என்று கேட்டேன். அந்த சமயத்தில் நான் வழக்கறிஞரை நியமித்தும், பஞ்சாயத்தார் மூலமும் வழக்கு சொத்து குறித்து பாகம் வேண்டும் என்று கேட்டேன். என் தந்தை சுமார் 25 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். அவரது இறப்பு சான்றிதழை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அவருடைய ம.சா.ஆ.4 இறப்பு சான்றிதழில் 1999ம் வருடம் அவர் இறந்துவிட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3) என் தந்தை உயிருடன் இருந்தபோது சொத்தில் பங்கு ஏதேனும் கேட்டோமா என்றால் கேட்டோம், தருகிறோம் என்று சொன்னார்கள். என் தந்தை இறப்பதற்கு 10 வருடங்களுக்கு முன்பு எனக்கு திருமணம் ஆனது, மற்ற மனுதாரர்களுக்கு அதற்கு முன்பே திருமணம் ஆகிவிட்டது. என் தந்தை இறந்தபிறகு வருவாய் ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்யவேண்டும் என்று என் சகோதரர்கள் என்னிடமும் மற்ற மனுதாரர்களிடம் கையெழுத்து வாங்கினார்களா என்றால் இல்லை. என் அக்கா பழனியம்மா மற்றும் கோவிந்தம்மாள் ஆகியோரின் பிள்ளைகளை என் சகோதரர்களின் பிள்ளைகளுக்கு திருமணம் செய்து வைத்துள்ளார்கள் என்றால் சரிதான். வருவாய் துறை ஆவணங்களில் என் தந்தை இறந்த பிறகு யாருடைய பெயர் மாற்றப்பட்டது என்று தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை.

4) மனு சொத்தின் சர்வே எண் மற்றும் பட்டா எண் தெரியுமா என்றால் தெரியவில்லை. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ–1 மற்றும் ம.சா.ஆ–2 பட்டாவில் யாருடைய பெயர் உள்ளது என்று தெரிந்து கொண்டேனா என்றால் என் தந்தை பெயர் தான் இருந்திருக்கும். மேற்கண்ட பட்டாக்கள் யார் எங்களிடம் கொடுத்தார்கள் என்றால் என் அண்ணன் மாரியண்ணன் தான் எங்களிடம் கொடுத்தார். அந்த மாரியண்ணனை இந்த வழக்கில் 9ம் எதிர்மனுதாரராக காண்பித்து இந்த மனுவை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். என் தந்தையின் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் ஆகியவற்றை யாரிடம் பெற்றோம் என்றால் அலுவலகத்திலிருந்து பெற்றோம். அது அரசு அலுவலகமா என்றால் எனக்கு தெரியவில்லை. மேற்படி சான்றிதழ்களை எந்த வருடம் பெற்றோம் என்றால் என் தந்தை இறந்தவுடனே பெற்றுவிட்டோம். மேற்கண்ட

சான்றிதழ்களுக்காக மனு கொடுத்தோமா அல்லது வாய்மொழியாக கேட்டு வாங்கிவந்தோமா என்றால் வாய்மொழியாக கேட்டு வாங்கிவந்ததோம். மேற்கண்ட சான்றிதழ்கள் யார் பெயருக்கு வழங்கப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

5) பெரியண்ணன், தாண்டவன், மாதையன், முத்து ஆகியோர்கள் தாக்கல் செய்த அ.வ.எண்.135/2001 என்று கோப்புக்கு எடுக்கப்பட்ட வழக்கில் என்ன பரிகாரம் கோரியிருந்தார்கள் என்று தெரிந்து கொண்டேனா என்றால் அது குறித்து எனக்கு தெரியவில்லை. பழனியப்பன் வகையறா என் அண்ணன் மாரியண்ணன் வகையறா மீது தாக்கல் செய்த அவ.எண்.75/2001 என்ற வழக்கு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த விவரம் தெரிந்து கொண்டோமா என்றால் தெரிந்து கொண்டோம். மேற்படி வழக்கில் என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்யப்பட்டது என்ற விவரம் தெரிந்து கொண்டோமா என்றால் தெரியாது. மேற்கண்ட விவரங்கள் தெரியாமல் இந்த கோரிக்கை மனுவை தாக்கல் செய்துள்ளோமா என்றால் ஆமாம், எங்களுக்கு உரிமையுள்ள சொத்தை தருமாறு கேட்டு தாக்கல் செய்துள்ளோம். மேற்கண்ட இரு வழக்குகளிலும் எங்களை தரப்பினர்களாக சேர்க்க சொல்லி பஞ்சாயத்து நடைபெற்ற காலகட்டத்தில் மனு ஏதேனும் தாக்கல் செய்தோமா என்றால் தாக்கல் செய்தோம். அந்த மனுவை இந்த மனுவில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

6) இந்த மனுவில் பழனியப்பன் வகையறா தரப்பில் தாக்கல் செய்த எதிருரையில் கண்ட விவரங்கள் குறித்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. அது தெரியாமல் தான் நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். நான் சொல்வது போல் மனுதாரர்களாகிய எங்கள் மூவருக்கும் வழக்கு சொத்தில் பங்குரிமை இருந்திருந்தால் 2001ல் மேற்கண்ட இரு வழக்குகள் தாக்கல் செய்தசமயத்திலேயே பாகம் கேட்டு மனு தாக்கல் செய்திருப்போம் என்றும், 9ம் எதிர்மனுதராராகிய மாரியண்ணன் வகையறாவிற்கு எதிராக மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றம் வரை நடந்த வழக்குகளில் அவர்களுக்கு எதிர்ப்பாக தீர்ப்பானதால் என் சகோதரர்கள் சொல்லி கொடுத்ததன் அடிப்படையிலும், அவர்கள் கொடுத்த ஆவணங்கள் அடிப்படையிலும் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல்

எதிர்மனுதாரர்கள் அவர்களுக்குள்ளாக ஒன்று சேர்ந்து வழக்குகளை தாக்கல் செய்திருந்தால், மாண்பமை மெட்ராஸ் உயர் நீதிமன்றம் வரை சென்று வழக்கை நடத்தியிருக்க மாட்டார்கள் என்றால் சரியல்ல. 2005 ல் வந்த சட்டத்திற்கு முன்பே 2001 ல் என் சகோதரர்கள் தாக்கல் செய்த வழக்கிலேயே அவர்களுக்கு அந்த சொத்து வாய்மொழி பாகமாக வந்தது என்று குறிப்பாக சொல்லியுள்ளார்கள் என்றும், அதை தற்போதுஇல்லை என்று நாங்கள் மறுப்பதற்கு எங்களுக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல.

7) என் சகோதரர்கள் தாக்கல் செய்த வழக்கு இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்ட பிறகு அதை எதிர்த்து மேல்முறையீடு தற்போது வரை அவர்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளார்கள். அந்த மேல்முறையீட்டு எண் என்ன என்று பார்த்து அதற்குண்டான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அ.வ.எண்.75/2001 ல் இந்நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்து என் சகோதரர்கள் மாண்பமை மேட்டூர் சார்பு நீதிமன்றத்தில் மே.மு.எண்.41/2005 என்ற வழக்கு தாக்கல் செய்தார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். அந்த மேல்முறையீட்டு மனுவில் எங்களை தரப்பினர்களாக சேர்க்ககோரி மனு ஏதேனும் தாக்கல் செய்தோமா என்றால் இல்லை. அந்த மேல்முறையீடு 27.07.2006 ல் தள்ளுபடி செய்து, இந்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை ஊர்ஜீதம் செய்யப்பட்டது என்றால் சரிதான், அதை எதிர்த்தும் மேல்முறையீடு தாக்கல் செய்தார்கள். அந்த இரண்டாம் மேல்முறையீடு எண்.1511/2007 ஐ மாண்பமை மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தில் என் சகோதரர்களால் தாக்கல் செய்து கடந்த 02.07.2021 ல் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான்.

8) மேற்கண்ட வழக்கில் இ ரு தொட்டிகளிலிருந்து தண்ணீர் எடுத்து செல்லும் உரிமை உள்ளது என்று விளம்புகை செய்யப்பட்டு, உடைக்கப்பட்ட பைப்பை மீண்டும் அமைத்து கொடுக்கவேண்டும் என்றும், செயலுறுத்துக்கட்டளை வழங்கி தீர்ப்பளிக்கப்பட்டது என்றால் சரிதான், அதற்கு அவசியம் இல்லை. மேற்படி வழக்கு விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்த வழக்கு என்பதால் உலகிலுள்ள அனைவரையும் அது கட்டுப்படுத்தும் என்றால் சரியல்ல. மேற்கண்ட வழக்கில் பாக உரிமை கேட்டு தாக்கல்

செய்யப்படவில்லை என்றால் சரிதான். 2021ல் மாண்பமை மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தில் தீர்ப்பு பிறப்பிக்கும் வரை எங்களுக்கு உரிமை உள்ளது என்றும், அந்த வழக்குகளில் எங்களை சேர்க்கவேண்டும் என்று எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல, கொடுத்துள்ளோம். நாங்கள் அவ்வாறு எதுவும் கொடுக்கவில்லை என்றும், இரண்டாம் மேல்முறையீடு தாக்கல் செய்த பிறகு பழனியப்பன் வகையறாவிற்கு வழங்கப்பட்ட தீர்ப்பை காலதாமதம் படுத்தவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் என் சகோதரர்கள் சொல்லி கொடுத்து எங்கள் மூவரை வைத்து பாகபிரிவினை வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

9) மேற்கண்ட பாகபிரிவினை வழக்கில் எதிர்மனுதாரர்கள் ஒன்று சேர்ந்து வழக்கு தாக்கல் செய்து எங்களை ஏமாற்றியதாக தற்போது சொல்லும் விவரத்தை சொல்லியுள்ளோமா என்றால் சொல்லியுள்ளோம். பி.வா.சா.ஆ.1 வழக்கான அ.வ.எண்.235/2015ல் எனக்கு வழக்கறிஞர் யார் என்றால் திரு.AMC பெரியசாமி அவர்கள் ஆவார். அந்த பிராதில் என்ன விவரம் உள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் நான் படிக்காததால் எனக்கு தெரியவில்லை. தற்போது சாட்சியம் அளிக்கும் மனுவில் யார் என்னுடைய வழக்கறிஞர் என்றால் திரு. K.ராஜகோபால் அவர்கள் ஆவார். மேற்கண்ட இருவருமே என் அண்ணன் மாரியண்ணனின் வழக்கறிஞர் என்றும், அவர்கள் வைத்து கொடுத்து இந்த மனுவை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2015ல் தாக்கல் செய்த வழக்கு நிலைக்கதக்கதல்ல என்று தெரிந்து கொண்டே மேற்கண்ட வழக்கை நடத்தாமல் தற்போது வரை நிலுவையில் வைத்து வருகிறோம் என்றால் சரியல்ல.

10) 2015ல் பாக வழக்கு தாக்கல்செய்ய எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்பதை தெரிந்தே தான் அந்த வழக்கு தாக்கல் செய்து, நடத்தாமல் இருந்து வருகிறோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பிற்கும், எங்களது கோரிக்கைக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றும், இந்த மனுவில் அந்த கோரிக்கையை வைக்க இயலாது என்றால் சரியல்ல. மேற்படி பாகவழக்கில் இந்த நிறைவேற்றுதல் மனுவை நிறுத்தி வைக்கவேண்டும் என்று ஏதேனும் மனு தாக்கல் செய்தோமா என்றால் இல்லை. உண்மையிலேயே எங்களுக்கு பாகம் இருந்திருந்தால்

மாண்பமை மெட்ராஸ் உ யர் நீதிமன்றம் வரை நடந்த வழக்கில் எங்களை தரப்பினர்களாக சேர்க்க சொல்லி மனு தாக்கல் செய்து அதில் Stay கேட்டு மனு தாக்கல் செய்திருப்போம் என்றால் சரியல்ல.

11) நாங்கள் தாக்கல் செய்த 2015 பாக வழக்கே நிறைவேற்றுதல் மனு 16/2015 ஐ காலதாமதம் படுத்தவேண்டும் என்பதற்காக தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இந்த மனு முரண் தடை என்ற கோட்பாட்டின்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. உண்மையில் 2005 ல் சட்டம் வருவதற்கு முன்பு பாகம் பிரிக்கப்படாமல் இருந்திருந்தால், சட்டம் வந்து 10 வருடங்கள் வழக்கை தாக்கல் செய்யாமல் இருந்திருக்க மாட்டோம் என்றால் சரியல்ல. உண்மைக்கு புறம்பாக சட்டப்படி தடை செய்யப்பட்ட உண்மைகளை முன்வைத்து இந்த மனுவை என்ன சர்வே எண்ணில் கண்ட சொத்திற்கு, என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டது என்பதே தெரியாமல் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

12) இந்த நிறைவேற்றுதல் மனு எந்த வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டதோ, அந்த தீர்ப்பு என்னையும் உலகிலுள்ள அனைவரையும் கட்டுப்படுத்தும் என்றும், அதை மறுக்க எங்கள் யாருக்கும் உரிமையில்லை என்றால் சரியல்ல. இந்த நிறைவேற்றுதல் மனுவில் இறுதி உத்தரவு பிறப்பிக்கப்படும் நிலையில் இந்த மனுவை காலதாமதம் ஏற்படுத்தவேண்டும் என்று வேண்டுமென்றே தாக்கல் செய்துள்ளோம் என்றும், அதனாலும் இந்த மனு நிலைக்கத்தக்கத்தல்ல என்றால் சரியல்ல. இதே மனுவை திரு.AMC பெரியசாமி என்ற வழக்கறிஞரை வைத்து 16.11.2015 ல் இதே நீதிமன்றத்தில் இந்த மனுவில் தாக்கல் செய்த ஆவணங்களுடன் தாக்கல் செய்தோமா என்றால் சரிதான். அந்த மனு தான் என்னிடம் காட்டப்படும் எ.ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஏன் 10 வருடங்கள் கழித்து அதே மனுவை வாசகங்கள் மாறாமல் தற்போது சமர்பித்ததற்கான காரணம் என்ன என்றால் என் வழக்கறிஞரிடம் கேட்டேன் வழக்கு

நடந்து வருவதாக தெரிவித்தார். அதன் பிறகு ஏன் வழக்கறிஞரை மாற்றி வேறு வழக்கறிஞரை வைத்து இந்த மனுவை தாக்கல் செய்தோம் என்றால் அவர் பாகபிரிவினை வழக்கை பார்த்து கொள்கிறார். இந்த நீதிமன்றத்திற்காக புது வழக்கறிஞரை வைத்துள்ளோம்.

13) நான் சொல்வது தவறு என்றும், பாகபிரிவினை வழக்கை திரு.AMC பெரியசாமி வழக்கறிஞரை வைத்து தான் நடத்தி வருகிறோம் என்றும், அதனால் தான் ஏற்கனவே தாக்கல் செய்த எ.ம.சா.ஆ.3 மனுவை அவரை வைத்தே தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. தற்போது வரை எங்களுக்கு சொத்தில் இவ்வளவு பாகம் என்று தீர்ப்பு எந்த நீதிமன்றத்திலும் பிறப்பிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. நாளை சொத்து எனக்கு கிடைக்க வாய்ப்பு உள்ளது என்று சொல்லி, தற்போது இந்த மனுவில் கண்ட சொத்திலுள்ள தூய்புரிமையை மறுக்க எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. இந்த மனுவே முழுக்க முழுக்க நானும், இந்த வழக்கில் கண்ட 9 வது எதிர்மனுதாரர்கள் வகையறாவும் கைசேர்ந்து கொண்டு திட்டமிட்ட சதி செய்து, அடிமுதலே செல்லாத கோப்புக்கு எடுக்கவே அருகதையற்ற மனுவை தாக்கல் செய்து, வீண் காலதாமதம் செய்து, வாதிகள் தீர்ப்பு பலன்களை அடையவிடாமல், செய்து வருகிறோம் என்றால் சரியல்ல.

14) 2015 ல் இருந்து இந்த நிறைவேற்றுதல் மனு தாக்கல் செய்த தேதியிலிலுருந்து உன்னிப்பாக கவனித்து வந்து என் சகோதரர்களுடன் சேர்ந்து கவனித்து வருகிறேன் என்றும் எனக்கு தற்போது தான் தெரியும் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மற்ற மனுதாரர்கள் இருவருமே மனு சொத்திற்கு அருகிலேயே கோல்நாயக்கன் பட்டியில் இருந்து வருகிறார்கள் என்றும், அவர்கள் இருவருமே என் சகோதரர்களுக்கு பெண் கொடுத்து எடுத்துள்ளார்கள் என்றும், அதனால் நான் வெளியே உள்ள ஆள் என்று பொய்யான தோற்றத்தை ஏற்படுத்தி இந்த மனுவில்

சாட்சியம் அளிக்க வைத்துள்ளார்கள் என்றும், ஆனால் நாங்கள் அனைவரும் 9ம் எதிர்மனுதாரார்கள் வகையறாவுடன் கை சேர்ந்து கொண்டுதான் இந்த மனுவை முன்னிலைப்படுத்தி நடத்தி வருகிறோம் என்றால் சரியல்ல. அதனால் இந்த மனு அதிகபட்ச நஷ்டஈடு தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.